தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புதன்கிழமை 1982, பிப்ரவரி 17

மாசி 5, துன்மதி, திருவள்ளுவர் 2013

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாரம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''குடிபுறம் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுஅன்று; வேந்தன் தொழில்''

குடிமக்களைப் பிறர் துன்புறுத்தாமல் காத்து, ஆவன செய்து ஆதரித்து, குற்றங்கள் செய்தால், அவற்றை மறுமுறையும் செய்யாமல் தடுக்கத் தண்டித்தல் வேந்தனுக்குப் பழி அன்று; அது அவனுக்குரிய தொழில்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தில் நடைபெற்ற ஒழுங்கீனங்கள்

*வினா எண். 221—திரு. கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) தமிழ்நாடு கிடங்கு வசதி கார்ப்பரேஷன் கிடங்குகளில் கடந்த மூன்றாண்டுகளில் நடைபெற்ற ஒழுங்கீனங்கள் பற்றி அரசுடைய கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (ஆ) அவையின் முன் ஒரு விவர அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

---

* 220-222 பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

திரு. கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே மதுராந்தகத்திலே நெல் மூட்டைகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது தவிர எப்.சி.ஐ.க்குச் சொந்தமான உர மூட்டைகள் 12 டன் காணாமல் போய்விட்டதென்றும், அதற்காக சேமிப்புக் கிடங்கிற்கு ஏறத்தாழ ரூ. 28,640 இழப்பு ஏற்பட்டிருக்கிறதென்றும், அதேபோல், திருவண்ணாமலை எப்.சி.ஐ, நிறுவனத்திற்குச் சொந்தமான கோதுமை களவுபோய், ஏறத்தாழ 2,48,409 ரூபாய் இழப்பு ஏற்பட்டதாகவும், திருச்சியிலே பாங்க் ஆப் பரோடாவிற்குச் சொந்தமான பொருள்கள் காணாமற்போய் 12,60,700 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதாகவும், தூத்துக்குடியில் எஸ்.டி.சி க்குச் சொந்தமான சர்க்கரை 288.4 மெட்ரிக் டன் காணாமல் போயின, அதன் விலை குறிப்பிடப்படவில்லை, ஏறத்தாழ 18 லிருந்து 20 லட்சம் ரூபாய் அதன் மதிப்பு இருக்கும், இராணிப்பேட்டையில் எப்.சி.ஐ.க்குச் சொந்தமான 212 புழுங்கல் அரிசி மூட்டைகள் காணாமல் போய்விட்டதென்றும், விழுப்புரம் சேமிப்பு நிலையத்தில் 34,000 ரூபாய் அளவிற்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி பலவேறு நிலைகளில் பல லட்சக்கணக்கான ரூபாய் பல நிறுவனங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக ஆண்டறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். இதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்று பல்வேறு இடங்களில் இப்படிப்பட்ட தவறுகள், கேடுகள் நடைபெற்ற இடத்தில், முறையாக நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது. இந்த அறிக்கையில் திருச்சி சேமிப்பு கிடங்கைப் பற்றியும், விழுப்புரம் சேமிப்பு கிடங்கைப் பற்றியும், கரூர் சேமிப்பு கிடங்கை பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. இதைத் தவிர, திருச்சி சேமிப்பு கிடங்கு, மேட்டுப்பாளையம் சேமிப்பு கிடங்கு, தென்காசி கிடங்கு, செங்கற்பட்டு கிடங்கு ஆகிய கிடங்குகளில் தவறுகள் ஏற்பட்டதற்கு காரணமாக இருந்த அதிகாரிகள் தற்காலிகமாக நீக்கிவைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது முறையாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நடவடிக்கை எடுப்பதில் பல்வேறு முறைகள் கையாள வேண்டியிருக்கிறது. சில விஷயங்களில் சர்வீஸ் கமிஷனை நாம் கேட்க வேண்டியிருக்கிறது. இதனால் காலதாமதம் ஏற்படுகிறது. ஆக, அத்தனை அதிகாரிகளின் மீதும், அந்தந்த தன்மைகளின் மீதும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல குற்றச்சாட்டுகளுக்கு உடந்தையாக இருந்த அதிகாரிகளுக்கு மேலதிகாரியாக உள்ள ஊத்திராபதி என்ற அதிகாரியின்மீது அரசு இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும்

1982 பிப்ரவரி 17]

எடுக்கவில்லை. விஜிலென்ஸ் அதிகாரிகள் அவர்மீது பல குற்றங்களைக் கண்டுபிடித்தும், அந்த மேலதிகாரிமீது இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இனியாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அதுபற்றிய முழு விவரக் குறிப்பு தற்போது என்னிடத்தில் இல்லை. தனியாக எழுதினால், இதுபற்றி விசாரித்து தக்க நடவடிக்கை எடுப்பேன் என்று உறுதி கூறுகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, சினிமா கொட்டைகளில் ஏ.சி. செய்யப்படுவதுபோல், நமது உணவு தானியக் கிடங்குகளில் பூச்சி, புழுக்கள் ஆகியவற்றிலிருந்து பாதுகாக்க ஏ.சி. செய்யப்படுமா? இதுபற்றி மத்திய உணவு அமைச்சராக இருந்த திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பூச்சி புழுக்கள் போன்றவற்றைத் தடுக்க பல்வேறு மருந்து வகைகள் இருக்கின்றன. கிடங்குகளில் அந்தப் பொருள்களை எப்படி சேமித்து வைப்பது என்பதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் எல்லாம் முறைப்படி செய்யப்பட்டு வருகின்றன. இதிலே ஏற்பட்டிருக்கும் கேடுபாடுகள் எல்லாம் பூச்சி புழுக்களால் ஏற்பட்டவை அல்ல: மனித உருவில் சிலபல புழுக்கள் பூச்சிகள் இருப்பதால் இப்படிப்பட்ட கேடுகள் ஏற்பட்டிருக்கின்றன. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பூச்சி புழுக்களில் இருந்து பாதுகாப்பதற்கு ஒவ்வொரு கொடவுனையும் ஏ.சி. செய்வது என்றால் சேமித்து வைக்கப்படும் உணவுப் பொருள்களுக்குச் செலவழிப்பதைவிட அதிகமாகச் செலவு செய்ய வேண்டிவரும்.

நியாயவிலைக் கடைகளைக் கண்காணிக்க மக்கள் குழுக்கள் அமைக்கும் திட்டம்

* வினா எண் 222.- திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா—

நியாயவிலைக் கடைகளின் செயல்களைக் கண்காணிக்கவும் சோதனையிடவும் மக்கள் குழுக்கள் அமைக்கப்படுமா?